IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
OS.No.–26/2019

DEPOSITION OF WITNESS – PW 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | யாசின் பானு | தாலுகா | |
| கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 27.11.2024 in accordance with the provisions of Act XX141.**

வா.சா.3 முதல் விசாரணை

1. நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இவ்வழக்கில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். தற்போது நான் சாக்கிலிபட்டி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி கிராமம் சர்வே எண் 14/9க்குரிய 'அ' பதிவேட்டின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் சிட்டா சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.2** ஆகவும், அதன் 10(1) சிட்டா சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.3** ஆகவும், அதன் அடங்கல் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.4** ஆகவும், புலப்படம் **சா.சா.ஆ.5** ஆகவும், கணினி 'அ' பதிவேடு **சா.சா.ஆ.6** ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி சர்வே எண் 14/9ன் வருவாய் ஆவணங்கள் தற்போது மருகான் மகன் நாகமலை மூப்பர் பெயரில் இருந்து வருகிறது. மேற்படி புலஎண்ணின் விஸ்தீரணம் 35 ஏர்ஸ் ஆகும்.

**1முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேற்படி சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.6 வரையான ஆவணங்களின் அசல் பதிவேடுகள் எனது பராமரிப்பில் எனது அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் அவை அசல் ஆவணங்களுடன் ஒப்பீடப்பட்டு சான்றிடப்பட்ட நகல் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், வட்டாட்சியர் சான்றிட்டு நகல் பெறப்பட்டுள்ளது.

2. வட்டாட்சியர் அசல் ஆவணங்களை ஒப்பிட்டு சான்றொப்பம் செய்தாரா என்று வட்டாட்சியரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். நான் எப்போது இருந்து சாக்கிலிப்பட்டியில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த 1 மாதமாக பணிபுரிந்து வருகிறேன். வருவாய் ஆவணங்களின்படி சர்வே எண் 14/9 நாகமலை மூப்பரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான்.

3. அசல் ஆவணங்களை நான் ஆஜர் செய்யாததால் சான்றிட்ட நகல்கள் சட்டப்படி ஏற்கத்தக்கது  அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.